# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT – 1 (2014-15)

## CLASS -VIII

**Maximum Marks : 90** **TAMIL** **Time : 3 Hours**

மதிப்பெண்கள் : 90 நேரம் : 3 மணி

## தமிழ்

குறிப்பு - 1.கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

2.விடைகள் தெளிவாகவும் , அழகாகவும் உரிய பக்க எண்களுடன் இருத்தல் வேண்டும்.

3.மாணவர்கள்தம் அறிவுத்திறனுக்கு ஏற்ப சொந்த நடையில் கட்டுரை எழுதுதல் வேண்டும்.

4.உரிய வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

## பகுதி 1

அ.கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.

பாரத நாடு பழம்பெரும் நாடு – நீரதன்

புதல்வர் இந்நினை வகற்றாதீர் !

என்றார் பைந்தமிழ்ப் புலவர் பாரதியார். ஆம் ! நாம் பாரதத்தாயின் புதல்வர்கள் என்று எண்ணும் போது நம்மை அறியாமலேயே நமக்கொரு பெருமிதம் தோன்றுகிறது. அதற்குக் காரணம் உலகம் போற்றும் நமது பண்பாடேயாகும்.

இப்பண்பாடு ஓரிரு தலைமுறைகளில் தோன்றி வருவது அன்று. வழிவழியாக வளர்ந்து வளம் பெறுதலாகும்.பழம்பெரும் பாரத நாட்டினராகிய நமது பண்பாடு மிகவும் தொன்மை மிக்கது. இந்தியாவிலுள்ள மொகஞ்சோதரா , ஹரப்பா போன்ற இடங்களில் கிடைத்த நாகரிகச் சான்றுகளும் தென்னகத்து ஆதிச்சநல்லூர் புதை பொருட்களும் நம் தொன்மையான பண்பாட்டுச் சான்று பகர்வனவாகும். நமது பாரதம் பல்வேறு சமயங்களின் பிறப்பிடமாக விளங்குகிறது. பிற நாடுகளிலிருந்து வருகை தந்த மதக்கொள்கைகளிடம் கூட காழ்ப்புணர்ச்சி கொள்ளாது , அவை வளர்வதற்கு இடம் விட்ட பெருமை பாரதத்திற்கு உண்டு. அதனால் பாரத நாட்டை பல சமய உண்மையெல்லாம் பரந்தொளிரும் நாடு எனப் போற்றினார் திரு.வி.க.

பாரதம் ஏறத்தாழ 900 மொழிகளைக் கொண்டது. எனினும் அனைவரும் பட்டொளி வீசிப் பறந்திடும் தேசியக்கொடியின் கீழ் அணிவகுத்து நிற்பது பெருமைக்குரியதாகும். பாரதத்திருநாடு பண்டை காலந்தொட்டே கலையையும் கைத்தொழிலையும் போற்றிய நாடு. வடக்கே நாலந்தாப் பல்கலைக் கழகமும் தெற்கே காஞ்சியும் கலையையும் கல்வியையும் வளர்த்தன. பாரத மக்கள் அறத்திலும் , வீரத்திலும் , கற்புநெறியிலும் விருந்தோம்பலிலும் சிறந்தவர்களாக விளங்குகிறார்கள். பாரதம் துணைக்கண்டம் என்று பெருமையுடன் அழைக்கப்படுகிறது.

**வினாக்கள் :-** 10

1. நம் தொன்மையான பண்பாட்டுச் சான்று பகர்வன எவை ?
2. திரு.வி.க.பாரதத்தை எவ்வாறு போற்றினார் ? ஏன் ?
3. பாரதத்தில் உள்ள மொழிகளின் எண்ணிக்கை எத்தனை ? நாலந்தா என்பது என்ன ?
4. பாரதமக்கள் எவற்றிலெல்லாம் சிறந்து விளங்குகிறார்கள் ?
5. பைந்தமிழ்ப்புலவர் யார் ? அவர் கூறியது என்ன ?

ஆ. கடிதம் எழுதுக. 10

களவுபோன மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தர வேண்டி காவல்துறை ஆய்வாளருக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி 2

**இலக்கணம் :-**

அ. பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3

1. திசைச் சொல்

அ. ஞாயிறு ஆ. பெற்றம் இ. கமலம் ஈ. மலை

2. குணப் பண்புப் பெயர்

அ. வெண்குடை ஆ. வட்டக்கல் இ. வெந்நீர் ஈ. கருங்கூந்தல்

3. சினையாகு பெயர்

அ. டிசம்பர் சூடினாள் ஆ. வெற்றிலை நட்டான்

இ. வெள்ளை அடித்தான் ஈ. பொங்கல் உண்டான்

ஆ. தகுந்த விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக். 3

4. உகிர் என்பது ______________

அ. மலர் ஆ. பல் இ. நகம் ஈ. பசு

5. ஓர் இடத்தின் பெயர் சினைக்கு ஆகி வருவது ______________ எனப்படும்.

அ. இடவாகு பெயர் ஆ. குணவாகு பெயர்

இ. சினையாகு பெயர் ஈ. காலவாகு பெயர்

6. கற்றவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியனவாய் அமைந்த தமிழ்ச்சொல் ______________

அ. இயற்சொல் ஆ. திரிசொல் இ. திசைச்சொல் ஈ. வடசொல்

இ. அடைப்புக்குள் கூறியவாறு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3

7. கேடு (விகுதிபெற்றத் தொழிற்பெயராக்குக)

அ. கெடு ஆ. தீது இ. நன்று ஈ. கெடுதல்

8. வறுவல் தின்றான் (எவ்வகை ஆகுபெயர் ?)

அ. முதலாகு பெயர் ஆ. சினையாகு பெயர்

இ. தொழிலாகு பெயர் ஈ. பண்பாகு பெயர்

9. மலர் (வடசொல் தருக)

அ. தாமரை ஆ. பூக்கள் இ. புஷ்பம் ஈ. கமலம்

ஈ. தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3

10. ஆசிரியர் தலைக்கு ஒரு வினாத்தாள் கொடுத்தார்.

அ. பண்பாகு பெயர் ஆ. பொருளாகு பெயர்

இ. சினையாகு பெயர் ஈ. இடவாகு பெயர்

11. ஆழி

அ. பெயர் திரிசொல் ஆ. வினை திரிசொல்

இ. திசைச்சொல் ஈ. வடசொல்

12.ஆடுதல்

அ.விகுதிபெற்றத் தொழிற்பெயர் ஆ.முதனிலைத் தொழிற்பெயர்

இ.முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஈ.பண்புப்பெயர்

<u>உ.சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u> 3

13.அ.ஆகு பெயர் ஆறு வகைப்படும்.

ஆ.ஆகு பெயர் பத்து வகைப்படும்.

இ.ஆகு பெயர் பதினாறு வகைப்படும்.

ஈ.ஆகு பெயர் பதினெட்டு வகைப்படும்.

14.அ.புஷ்பம் என்பது வினைச்சொல்

ஆ.புஷ்பம் என்பது திசைச்சொல்

இ.புஷ்பம் என்பது வடசொல்

ஈ.புஷ்பம் என்பது இடைச்சொல்

15.அ.அன்பகம் - குணப் பண்புப்பெயர்

ஆ.அன்பகம் - வடிவப் பண்புப்பெயர்

இ.அன்பகம் - சுவைப் பண்புப்பெயர்

ஈ.அன்பகம் - நிறப் பண்புப்பெயர்

## பகுதி 3

<u>அ.பொருள் கூறுக.(நான்கு மட்டும் )</u> 4

1.ஆவணம் 2.சரிதம் 3.வையகம் 4.யாக்கை 5.வன்பாற்கண்

ஆ. பிரித்து எழுதுக. (நான்கு மட்டும்) 4

1. பேருதவி 2. அருந்தமிழ் 3. ஓய்வின்றி 4. அன்புடையார் · 5. வியப்பூட்டும்

இ. எதிர்ச்சொல் தருக. ( நான்கு மட்டும்) 4

1. விருப்பு 2. இயற்கை 3. அறம் 4. வற்றல் 5. நண்பு

ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக. 3

1. இராமலிங்கனாரின் பாடல்கள் ____________ என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

2. உ. வே. சா. பிறந்த ஊர் ____________________.

3. திருக்குறள் ____________________ நூல்களுள் ஒன்று.

உ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3

1. குறிஞ்சிப்பாட்டில் உள்ள பூக்களின் எண்ணிக்கை ___________

அ. தொண்ணூறு ஆ. தொண்ணூற்றாறு இ. தொண்ணூற்றொன்பது

2. வள்ளலார் என அழைக்கப்பட்டவர் _______________

அ. உ. வே. சா ஆ. இராமலிங்க அடிகளார் இ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை

3. நீர் நிலைகளில் வாழும் பறவை ______________

அ. நாரை ஆ. மின் சிட்டு இ. மஞ்சள் சிட்டு

ஊ. பொருத்துக. 5

1. சரஸ்வதி மகால் - இராமலிங்க அடிகளார்

2. குறிஞ்சிபாட்டு - திருநெல்வேலி

3. உ. வே. சா. நூலகம் - தஞ்சாவூர்

4. வள்ளலார் - சென்னை , பெசன்ட் நகர்

5. கூந்தன்குளம் - கபிலர்

எ. எவையேனும் நான்கனுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 8

1. இராமலிங்க அடிகளார் எழுதிய உரைநடை நூல்கள் யாவை ?

2.உ.வே.சா.ஏன் கொடுமுடிக்குச் சென்றார் ?

3.வலசை போதல் என்றால் என்ன ?

4.அன்பில்லாத வாழ்க்கை தளிர்க்காது – எதைப் போல ?

5.உ.வே.சா.பதிப்பித்த நூல்களுள் ஏதேனும் நான்கினை எழுதுக.

6.தமிழ்நாட்டிலுள்ள பறவைகள்சரணாலயங்கள் நான்கினைக் கூறுக.

ஏ.எவையேனும் இரண்டனுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 8

1.இறைவன் எவற்றிலெல்லாம் கலந்ததாய் இராமலிங்க அடிகளார் கூறுகிறார் ?

2.குறிஞ்சிப்பாட்டு நூலைப் புதுப்பிக்க உ.வே.சா.மேற்கொண்ட முயற்சி என்ன ?

3.அன்புடையாரின் சிறப்புகள் யாவை ?

4.பறவைகளின் புகலிடமான கூந்தன்குளம் பற்றி எழுதுக.

## பகுதி 4

அ.அடிமாறாமல் எழுதுக. 4+2+2=8

1.' கண்ணில்' எனத் தொடங்கும் திருவருட்பா பாடலை எழுதுக.

2.' அன்புஈனும்' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

3.' அறம்' என முடியும் குறளை எழுதுக.

ஆ. 'பாம்புகள்' எனும் தலைப்பில் அமைந்துள்ள துணைப்பாடக் கட்டுரையை எழுதுக. 8

*********